முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2023 யூலை

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2023-08-20
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரலில்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணை*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 01

**வரையறுக்கப்பட்ட True கம்பனி, பொருள் U** ஐக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட True கம்பனி**யின் நிதிக் கூற்றுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

*(ரூபா)*

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2023 | 2022 |
|---|---|---|
| விற்பனைகள் | 800,000 | 650,000 |
| விற்பனை செய்த பொருள்களின் கிரயம் | (576,000) | (481,000) |
| **மொத்த இலாபம்** | **224,000** | **169,000** |
| **மார்ச் 31 இல்** | **2023** | **2022** |
| தொக்கு | 125,400 | 105,000 |
| வியாபார சென்மதிகள் | 105,486 | 85,362 |

**பொருள் U** ஆனது காசு அடிப்படையில் மாத்திரம் விற்பனை செய்யப்படுவதுடன் அனைத்து கொள்வனவு களும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழிற்படு மூலதன சுற்றுக் காலத்தை (நாட்களில்) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட Inno கம்பனி** ஆனது **பொருள் J** ஐ உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் **பொருள் J** இன் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **அலகொன்றுக்கு (ரூபா)** |
|---|---|
| நேர் பொருள் | 325 |
| நேர் கூலி<br>(0.5 மணித்தியாலம், மணித்தியாலமொன்றுக்கு ரூபா 300/- வீதம்) | 150 |
| விற்பனை விலை | 650 |

கீழ்வரும் தகவல்கள் 2023 யூன் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்காகத் தரப்பட்டுள்ளன:

*(ரூபா)*

| | **பாதிடப்பட்டது** | **உண்மையானது** |
|---|---|---|
| நிலையான மேந்தலைகள்: | | |
| உற்பத்தி (ரூபா) | 270,000 | 293,600 |
| உற்பத்தியற்ற (ரூபா) | 434,000 | 434,000 |
| | **704,000** | **727,600** |
| உற்பத்தி (அலகுகள்) | 18,000 | 19,400 |
| விற்பனை (அலகுகள்) | 18,000 | 19,100 |

2023 ஏப்ரல் 01 இல் ஆரம்ப இருப்பாக **பொருள் J** இன் 1,500 அலகுகள் இருந்ததுடன் 2023 யூன் 30 இல் இருப்பாக 1,800 அலகுகள் காணப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

உறிஞ்சல் கிரய முறையைப் பயன்படுத்தி, 2023 யூன் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்கான வருமானக் கூற்றினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட Farm கம்பனி**யானது தனது சொந்த பச்சை இல்லங்களில் (green houses) காய்கறிகளைப் பயிரிட்டு சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. அது முற்றுமுழுதாக தக்காளியைப் பயிரிடுகின்ற எதிர்பார்ப்போடு ஒரு புதிய பச்சை இல்லத்தை அமைக்கிறது. தற்போது, கம்பனியானது அடுத்த ஆண்டிற்கான பாதீட்டைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

மதிப்பீடுகளின் அடிப்படையில், தக்காளி அறுவடை முடிந்த உடனேயே அவை விற்பனை செய்யப்படும் என்பதுடன் ஒரு கிலோகிராம் தக்காளிக்கான விலை ரூபா 400/- அல்லது ரூபா 300/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் விலையானது கிலோகிராமொன்றுக்கு ரூபா 350/- ஆக இருக்கும். அறுவடை பெரும்பாலும் 100,000 கிலோகிராமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் நம்பிக்கையான (optimistic) மதிப்பீடு 145,000 கிலோகிராம் ஆகவும் அவநம்பிக்கையான (pessimistic) மதிப்பீடு 94,000 கிலோகிராம் ஆகவும் இருக்கிறது.

மாறும் கிரயமானது பெரும்பாலும் விற்பனைப் பெறுமதியில் 35% ஆக இருக்கும் அதே வேளை நம்பிக்கையான மதிப்பீடு 32% ஆக இருப்பதுடன் அவநம்பிக்கையான மதிப்பீடு 38% ஆக இருக்கிறது. நேரடியாக நிர்ணயிக்கத்தக்க (attributable) நிலையான கிரயங்கள் +/-10% மாறுபாட்டுடன் பெரும்பாலும் ஆண்டிற்கு ரூபா 8,000,000/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மூன்றடுக்கு அணுகுமுறையைப் பயன்படுத்தி, பெரும்பாலும் நம்பிக்கையான மற்றும் அவநம்பிக்கையான சூழ்நிலைகளின் கீழ் பாதீடுகளைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

நியமக் கிரயவியல் (Standard Costing) ஆனது அதன் பயனைக் கருத்திற்கொண்டு பல நிறுவனங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நியமக் கிரயவியலைப் பயன்படுத்துவதன் இரண்டு (02) நோக்கங்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) ஒரு நவீன நிறுவனத்தில் நியமக் கிரயவியலை நடைமுறைப்படுத்தும்போது நீங்கள் எதிர்கொள்ளக் கூடிய இரண்டு (02) பிரச்சினைகளை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட Favours கம்பனி** முன்கூட்டிய ஓடர்களின் அடிப்படையில் தனிப்பயனாக்கப்பட்ட பரிசுப் பொருள்களை தயாரிப்பதில் ஈடுபடுகிறது. அதன் செயற்பாடுகளுடன் தொடர்புடைய கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன:

(1) ஓடர்கள் முன்கூட்டியே செய்யப்பட்டு, விநியோகத் திகதிக்கு 60 நாட்களுக்கு முன்னதாக 50% முற்பணமும் செலுத்தப்பட்டது. மீதிப்பணம் விநியோகத்தின்போது செலுத்தப்படும்.

(2) 2023 மே மாதம் தொடக்கம் நவெம்பர் மாதம் வரையிலான மூலப்பொருள் கொள்வனவுகள் மற்றும் விநியோகத் திகதிகளின் அடிப்படையிலான விற்பனைப் பெறுமதிகள் என்பன கீழே தரப்பட்டவாறு அமையுமென பாதிடப்பட்டுள்ளது:

| | மே-23 | யூன்-23 | யூலை-23 | ஆக-23 | செப்-23 | அக்-23 | நவெம்-23 |
|---|---|---|---|---|---|---|---|
| **விற்பனை (ரூபா) (விநியோகத்தில்)** | 2,200,000 | 2,000,000 | 2,000,000 | 2,600,000 | 3,500,000 | 1,500,000 | 1,800,000 |
| **மூலப்பொருள் கொள்வனவுகள் (ரூபா)** | 4,300,000 | 1,000,000 | 700,000 | 800,000 | 800,000 | 2,000,000 | 1,000,000 |

(3) மூலப்பொருள் கொள்வனவுகள் 30 நாள் கடன் காலப்பகுதியொன்றுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

(4) விநியோகமானது ஒப்பந்தம் செய்யப்பட்ட மூன்றாம் தரப்பு ஒன்றினால் கையாளப்படுகிறது. விநியோகக் கட்டணம் மாதத்தின் விற்பனைப் பெறுமதியில் 15% ஆகும். கொடுப்பனவானது விநியோகத்தின் பின்னரான 30 நாள் கடன் காலப்பகுதி ஒன்றுடன் செலுத்தப்படுகிறது.

(5) ஊழியர்களின் மாதாந்தம் சம்பளம் ரூபா. 180,000/-, ஒவ்வொரு மாத இறுதியிலும் செலுத்தப் படுகிறது.

(6) நிருவாகச் செலவினங்கள் மாதமொன்றுக்கு ரூபா 30,000/- ஆகும். இதில் 80% ஆனவை 30 நாள் கடன் அடிப்படையிலானவை.

(7) 2023 யூலை 01 இல் ஆரம்ப காசு மீதியாக ரூபா 200,000/- இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மிகையான காசு 6% வருடாந்த வட்டி வழங்கும் சேமிப்புக் கணக்கொன்றில் வைத்திருக்கப்படும். வட்டியானது மாத ஆரம்பத்தில் இருக்கும் ஆரம்ப மீதியின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2023 யூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட Polar கம்பனி** இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி 3 வெவ்வேறு பொருள்களை தயாரிக்கிறது. கூலி மற்றும் பொதியிடல் மாத்திரமே உள்நாட்டில் மேற்கொள்ளப்படுகிறது. தற்போதைய இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக, கம்பனி மூலப்பொருள்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கிறது.

கீழுள்ள தகவல்கள் பொருள்களின் நியமக் கிரய அட்டைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | ரூபா (அலகொன்றுக்கு) | | |
|---|---|---|---|
| | **பொருள் W** | **பொருள் X** | **பொருள் Y** |
| விற்பனை விலை | 3,900 | 5,400 | 6,500 |
| மூலப்பொருள் **A** (கிலோகிராமொன்று ரூபா 16,000/-) | 1,600 | 3,200 | 4,000 |
| மூலப்பொருள் **B** (கிலோகிராமொன்று ரூபா 5,000/-) | 1,250 | 1,000 | 750 |
| செயன்முறைக் கூலி (மணித்தியாலத்திற்கு ரூபா 800/-) | 200 | 200 | 320 |
| பொதியிடல் கூலி (மணித்தியாலத்திற்கு ரூபா 400/-) | 40 | 40 | 40 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 100 | 120 | 150 |
| மாதமொன்றுக்கு பாதிடப்பட்ட விற்பனை அலகுகள் | 45,000 | 40,000 | 15,000 |

2023 செப்ரெம்பர் மாதத்திற்கு **மூலப்பொருள் A** இல் 12,500 கிலோகிராமும் **மூலப்பொருள் B** இல் 24,000 கிலோகிராமும் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கணிப்பீடுகளின் உதவியுடன் வரையறைக் காரணி / காரணிகளை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) இனங்காணப்பட்ட வரையறைக் காரணி/காரணிகளின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையை (optimal production mix) **கணிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**QR PLC** என்பது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனியாகும். கீழ்வரும் தகவல்கள் **QR PLC** இன் நிதிக் கூற்றுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

(1) கம்பனி 15 மில்லியன் சாதாரண வாங்குரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டிருப்பதுடன் ஆரம்பத்தில் இந்தப் பங்கொன்று ரூபா 30/- விலையில் விநியோகிக்கப்பட்டிருந்தது. தற்போது இந்தப் பங்கொன்று ரூபா 35.20 என்ற அடிப்படையில் வர்த்தகம் செய்யப்படுகிறது. கம்பனி கடந்த நிதி ஆண்டிற்காக பங்கொன்றுக்கு ரூபா 8/- வீதத்தில் பங்கிலாபம் செலுத்தியிருந்தது. பங்கிலாபங்கள் ஆண்டிற்கு 10% இனால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(2) கம்பனி 40 மில்லியன் பட்டியலிடப்பட்ட மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டுள்ளது. இந்தப் பங்குகள் ஆரம்பத்தில் பங்கொன்று ரூபா 14/- விலையில் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது பங்கொன்று ரூபா 10/- விலையில் வர்த்தகம் செய்யப்படுகிறது. பங்கொன்றிற்கான வருடாந்த பங்கிலாபம் ரூபா 2.10.

(3) கம்பனி, தனிச்சமொன்று ரூபா 100/- விலையில் விநியோகிக்கப்பட்ட 5 மில்லியன் பட்டியலிடப்பட்ட 6 வருட மீட்கப்படத்தக்க தனிச்சங்களைக் கொண்டிருக்கிறது. இது ஆண்டிற்கு 18% என்ற கூப்பன் வீதமொன்றைக் கொண்டிருக்கிறது. தற்போது தனிச்சமொன்று ரூபா 80/- விலையில் வர்த்தகம் செய்யப்படுகிறது.

வருமான வரி வீதம் 30% எனக் கொள்க.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக**:

(a) சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(c) மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம் (03 புள்ளிகள்)

(d) சந்தைப் பெறுமதியைப் பயன்படுத்தி, நிறையேற்றப்பட்ட சராசரி மூலதனக் கிரயம் (WACC). (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட ஓவல் கம்பனி பொருள் P** ஐ உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் ஈடுபடுகிறது. கீழ்வரும் தகவல்கள் **பொருள் P** இற்கான நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | **அலகொன்றுக்கு (ரூபா)** |
|---|---:|
| நேர் பொருள் ( 2 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 500/- வீதம்) | 1,000 |
| நேர் கூலி: | |
| உற்பத்திக் கூலி (0.5 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 800/- வீதம்) | 400 |
| துணைக் கூலி (1.5 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 500/- வீதம்) | 750 |
| மாறும் மேந்தலைகள் (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 200/- வீதம்) | 400 |
| **மொத்த மாறும் கிரயம்** | **2,550** |
| விற்பனை விலை | 3,400 |
| **அலகொன்றிற்கான பங்களிப்பு** | **850** |

| | |
|---|---:|
| பாதிடப்பட்ட விற்பனை / மாதமொன்றுக்கான உற்பத்தி (அலகுகள்) | 25,000 |

கம்பனி தற்போது 2023 யூன் மாதத்திற்கான செயலாற்றுகையை பகுப்பாய்வு செய்யும் செயன்முறையில் ஈடுபட்டிருப்பதுடன் மாதத்திற்கான உண்மையான உற்பத்தி / விற்பனைக் கணியம் 26,000 அலகுகளாக இருக்கிறது. உண்மையான செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது:

| | **(ரூபா)** |
|---|---:|
| விற்பனை வருமானம் (26,000 அலகுகள்) | 87,880,000 |
| நேர் பொருள் (53,300 கிலோகிராம்) | 26,010,400 |
| நேர் கூலிக் கிரயம் : | |
| உற்பத்திக் கூலி (12,480 மணித்தியாலங்கள்) | 10,296,000 |
| துணைக் கூலி (41,600 மணித்தியாலங்கள்) | 24,128,000 |
| மாறும் மேந்தலைகள் | 10,275,200 |
| நிலையான மேந்தலைகள் | 2,156,000 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக**:

(a) நேர் பொருள் கிரய முரண். (02 புள்ளிகள்)

(b) நேர் கூலி வீத முரண். (02 புள்ளிகள்)

(c) நேர் கூலி கலவை முரண். (03 புள்ளிகள்)

(d) நேர் கூலி விளைவு / உற்பத்தித்திறன் முரண். (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

**வரையறுக்கப்பட்ட Works கம்பனியானது பொருள் W** ஐ உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. இது மாதமொன்றுக்கு 10,000 அலகுகள் என்ற செயன்முறைப்படுத்தல் கொள்ளளவைக் கொண்டுள்ள ஏற்கனவேயுள்ள இயந்திரமான **T12** இனை மாற்றீடு செய்வது பற்றி தற்போது கவனஞ் செலுத்துகிறது. புதிய இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டதும் உடனடியாகவே பழைய இயந்திரத்தை ரூபா 4 மில்லியனுக்கு விற்பனை செய்ய முடியும். இந்த மாற்றீடு தொடர்பில் இரண்டு தெரிவுகள் இனங்காணப்பட்டதுடன் அவை கீழே தரப்பட்டுள்ளன:

| | | **இயந்திரம் X99** | **இயந்திரம் Y23** |
|---|---|---|---|
| கிரயம் | (ரூபா) | 25,000,000 | 40,000,000 |
| மாதமொன்றுக்கான கொள்ளளவு | (அலகுகள்) | 20,000 | 35,000 |
| அலகொன்றுக்கான மாறும் மேந்தலைக் கிரயம் | (ரூபா) | 40 | 38 |
| பயன்தரும் ஆயுட்காலம் | (ஆண்டுகள்) | 4 | 5 |
| வரி நோக்கங்களுக்கான மூலதன விடுதொகை (capital allowance) (ஆண்டொன்றிற்கு) | | 25% | 25% |

நேர் பொருள் மற்றும் நேர் கூலிக் கிரயம் அலகொன்றுக்கு ரூபா 140/- ஆக இருக்கும்போது, **பொருள் W** ஆனது அலகொன்று ரூபா 500/- இற்கு விற்பனை செய்யப்படுகிறது. தேய்மானத்தை உள்ளடக்காத வருடாந்த நிலையான கிரயங்கள் ரூபா 8 மில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**பொருள் W** இற்கான கேள்வி 1 ஆவது ஆண்டில் 100,000 அலகுகளாக இருக்குமென மதிப்பிடப் பட்டுள்ளதுடன் அதன் பின்னர் ஆண்டிற்கு 12% இனால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கம்பனி ஆண்டிற்கு 30% இல் வரி செலுத்துவதுடன் அது அந்தந்த ஆண்டிலேயே செலுத்தப்பட வேண்டும். மூலதனக் கிரயம் 20% ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இரண்டு (2) தெரிவுகளினதும் நிகர இற்றைப் பெறுமதிகளை (NPV) தனித்தனியாகக் **கணிக்குக.** (12 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட Works கம்பனி** கொள்வனவு செய்ய வேண்டிய இயந்திரத்தை **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

(A) **வரையறுக்கப்பட்ட Oxy கம்பனி** பல செயன்முறைகளைப் பயன்படுத்தி **பொருள் $CO_2$** ஐத் தயாரிக்கிறது. 2023 யூன் மாத ஆரம்பத்தில் ரூபா 20,350,000/- கிரயமான 25,000 லீற்றர் பொருள்கள் **செயன்முறை 2** இலிருந்து **செயன்முறை 3** இனுள் உள்ளிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக, ரூபா 8,547,000/- பெறுமதியான நேர் கூலி மற்றும் ரூபா 2,564,100/- பெறுமதியான மாறும் உற்பத்தி மேந்தலைகள் என்பன 2023 யூன் மாத காலப்பகுதியில் **செயன்முறை 3** இற்காக செலவழிக்கப்பட்டன.

2023 யூன் மாத ஆரம்பத்தில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களில் ஆரம்ப புத்துருவாகும் வேலைகளில் 3,460 லீற்றர்கள் இருப்பில் இருந்தன.:

| | | |
|---|---|---|
| **செயன்முறை** 2 இலிருந்தான உள்ளீடு | : | 100% பூர்த்தியடைந்துள்ளது, மதிப்பு ரூபா 2,800,120/- |
| நேர் கூலி | : | 60% பூர்த்தியடைந்துள்ளது, மதிப்பு ரூபா 693,650/- |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | : | 35% பூர்த்தியடைந்துள்ளது, மதிப்பு ரூபா 121,600/- |

ஆரம்ப புத்துருவாகும் வேலைகள் சராசரிக் கிரய அடிப்படையில் கையாளப்படுகின்றன.

2023 யூன் மாத இறுதியில், 3,100 லீற்றர் இறுதிப் புத்துருவாகும் வேலைகள் இருப்பில் காணப்பட்டன. இவை 100%, 70% மற்றும் 40% பூர்த்தி மட்டங்களில் முறையே **செயன்முறை 2** இலிருந்தான உள்ளீட்டுப் பொருள்கள், நேர் கூலி மற்றும் மாறும் உற்பத்தி மேந்தலைகளைக் கொண்டிருந்தன. மாத இறுதியில் 23,700 லீற்றர்கள், இறுதிப் பொருள்களாக மாற்றப்பட்டன.

**செயன்முறை 2** இலிருந்தான உள்ளீட்டுப் பொருளிலிருந்து 6% சாதாரண நட்டம் ஏற்படுவதுடன் ஒடிவானது (scrap) லீற்றரொன்று ரூபா 210/- விலையில் விற்கப்பட முடியும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் **செயன்முறை 3** கணக்கையும் **தயாரிக்குக.**

(14 புள்ளிகள்)

(B) (a) **வரையறுக்கப்பட்ட Rite கம்பனி $W_1$, $W_2$** என்ற 2 பொருள்களை அறிமுகப்படுத்துவது பற்றி தற்போது கவனம் செலுத்துகிறது. இரண்டு பொருள்களுக்குமான கீழ்வரும் நிலையான மேந்தலைகள் தரப்பட்டுள்ளன:

(1) $W_1$ இற்கு ரூபா 1.3 மில்லியன் கிரயத்திலும் $W_2$ இற்கு ரூபா 2 மில்லியன் கிரயத்திலும் சந்தை ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

(2) பொருள்களை அறிமுகப்படுத்துகின்ற முதலாவது ஆண்டிற்கான சந்தைப்படுத்தல் பாதீடு ஒவ்வொரு பொருளுக்கும் தலா 5 மில்லியன் ரூபாவாக இருக்குமென மதிப்பிடப் பட்டுள்ளது.

(3) பொருள்கள் அறிமுகப்படுத்தப்பட்டால், $\mathbf{W_1}$ இற்காக வாடகைக்கு அமர்த்தப்படும் விற்பனை முகாமையாளருக்கு ஆண்டிற்கு ரூபா 5 மில்லியன் சம்பளமும் $\mathbf{W_2}$ இற்காக வாடகைக்கு அமர்த்தப்படும் விற்பனை முகாமையாளருக்கு ஆண்டிற்கு ரூபா 6 மில்லியன் சம்பளமும் செலுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(4) பொருள்கள் அறிமுகப்படுத்தப்பட்டால், அதன் முதல் வருடத்தில் ஊழியர்களுக்கான பயிற்சிக்கு $\mathbf{W_1}$ தொடர்பில் ரூபா 2.1 மில்லியன் கிரயமும் $\mathbf{W_2}$ தொடர்பில் ரூபா 2.4 மில்லியன் கிரயமும் செலவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(5) $\mathbf{W_1}$ மற்றும் $\mathbf{W_2}$ இற்கான இயந்திர வாடகைகள் முறையே ஆண்டிற்கு ரூபா 15.05 மில்லியனாகவும் ரூபா 18.65 மில்லியனாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(6) $\mathbf{W_1}$ மற்றும் $\mathbf{W_2}$ இற்கு ஆண்டிற்கான பிற நிலையான மேந்தலைகள் முறையே ரூபா 4.5 மில்லியனாகவும் ரூபா 4.9 மில்லியனாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

1 ஆவது ஆண்டிற்கான பொருள்கள் $\mathbf{W_1}$ மற்றும் $\mathbf{W_2}$ உடன் தொடர்புடைய நிலையான மேந்தலைக் கிரயங்களை தனித்தனியாக **இனங்காண்க.**

*(ஏதாவது மேந்தலை தொடர்பற்றதாக இருப்பின், அதற்கான காரணத்தை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்).* (05 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட Rite கம்பனியின்** 2 பொருள்களினதும் நியமக் கிரய அட்டைகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன:

| | **$W_1$ (ரூபா)** | **$W_2$ (ரூபா)** |
|---|---:|---:|
| விற்பனை விலை | 2,900 | 3,750 |
| நேர் பொருள் | (900) | (1,336) |
| நேர் கூலி | (500) | (600) |
| மாறும் மேந்தலைகள் | (315) | (364) |

முதலாவது ஆண்டில் $\mathbf{W_1}$ மற்றும் $\mathbf{W_2}$ இற்கான பாதிடப்பட்ட விற்பனைகள் முறையே 2 : 1 என்ற விகிதத்தில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

$\mathbf{W_1}$ மற்றும் $\mathbf{W_2}$ இற்கான சமநிலை விற்பனைப் பெறுமதிகளை (Break-even Sales Values) (ரூபாவில்) தனித்தனியாகக் **கணிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |